## இறைச்சிக்காக மாடுகளை விற்கும்

# மத்திய அரசின் தடை உத்தரவை ரத்து செய்தது சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஜூலை 12–

**கால்நடை சந்தைகளில் இறைச்சிக்காக மாடுகளை விற்கவோ, வாங்கவோ கூடாது என தடை செய்து கடந்த மே மாதம் மத்திய அரசு உத்தரவிட்டது. மத்திய அரசின் இந்த அறிவிக்கையை ரத்து செய்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.**

மாடு வாங்கல், விற்றலை ஒழுங்கு படுத்தி மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் 'மிருகவதை தடை தடுப்பு விதிகள் 2017' என்று அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது.

மத்தியஅரசின்இந்தநடவடிக்கைக்கு நாடு முழுவதும் அரசியல் கட்சிகளும் பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் இதற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றன.

தமிழகத்திலும் மத்திய அரசுக்கு எதிராக போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்றது. மத்திய அரசின் உத்தரவால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும், சிறுபான்மையினரின் உரிமை மற்றும் உணவு உண்பவர்களின் உரிமையில் மத்திய அரசு தலையிடுவதாக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

இந்நிலையில் மத்திய அரசின் இந்த அறிவிக்கைக்கு எதிராக மதுரையை சேர்ந்த எஸ்.செல்வகோமதி மற்றும் பி.ஆஷிக் இலாஹி பாவா ஆகியோர் சென்னை ஐகோர்ட்டின் மதுரை கிளையில் வழக்கு தொடுத்தனர்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட் மதுரை கிளை மத்திய அரசின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

சென்னை ஐகோர்ட் மதுரை கிளையின் உத்தரவை ரத்துசெய்யக்கோரி மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தது. அதே நேரத்தில் மத்திய அரசின் கால்நடை சந்தை ஒழுங்குமுறை விதிகளை ரத்து செய்யக்கோரி ஐதராபாத்தை சேர்ந்த அப்துல் பஹீம் குரேஷி உள்ளிட்ட சிலர் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களின்மீதானவிசாரணை நேற்று சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர், நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் கபில் சிபல் தன்னுடைய வாதத்தில் கூறும்போது, அரசாங்கத்தின் இந்த விதிமுறை விவசாயிகளை அச்சுறுத்துவதாக அமைந்துள்ளது. சான்றிதழ் பெற்றுத்தான் மாடுகளை விற்கவோ வாங்கவோ முடியும் என்ற நிலை நடைமுறையில் சாத்தியம் அற்றது. இதனால் விவசாயிகளும் மாட்டு வணிகர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, மத்திய அரசின் அறிவிக்கையை ரத்துசெய்ய உத்தரவிட வேண்டும் என்று கூறினார்.

மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் நரசிம்மா தன்னுடைய வாதத்தில், கால்நடைகளை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாக கொண்டுதான் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டது. இந்த விதிமுறைகள் தொடர்பாக பல்வேறு எதிர் கருத்துகள் வந்து இருப்பதால் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தற்போது மறுபரிசீலனை செய்து அந்த விதிமுறைகளில் சில திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. சென்னை ஐகோர்ட்டின் மதுரை கிளை மத்திய அரசின் அறிவிக்கைக்கு முழுவதுமாக தடை விதித்துள்ளது. அதனால் இதுவரை இந்த விதிமுறைகள் நடைமுறைக்கு வரவில்லை. அந்த தடையை விலக்க வேண்டும் என்று மத்திய அரசு சார்பில் தற்போதைக்கு நாங்கள் கோரிக்கை எதுவும் விடுக்கவில்லை. அதே நேரத்தில் இந்த விதிமுறைகளில் சில மாற்றங்களை செய்ய மத்திய அரசு முன் வந்திருப்பதால், அரசு பிறப்பித்த அரசாணையை முற்றாக ரத்து செய்வதாக எடுத்துக்கொள்ள கூடாது என்று கூறினார்.

இதனை தொடர்ந்து நீதிபதிகள், மத்திய அரசு யாரையும் பாதிக்காத வகையில் திருத்தப்பட்ட அரசாணை வெளியிடுவது தொடர்பாக பரிசீலிக்க வேண்டும். முறை அறிவிக்கைக்கு பிறகு அதனை செயல்படுத்தும் வகையில் மத்திய அரசு அனைவருக்கும் போதிய அவகாசம் வழங்க வேண்டும். கடந்த மே மாதம் மத்திய அரசு வெளியிட்ட அறிவிக்கைக்கு சென்னை ஐகோர்ட்டின் மதுரை கிளை விதித்து உள்ள தடை தொடரும் என்றும் இந்த தடை நாடு முழுவதும் பரவலாக அமலில் இருக்கும் என்றும் உத்தரவு பிறப்பித்தனர்.

## நேற்று 11 ஆயிரம் பக்தர்கள் பனி லிங்க தரிசனம்

ஸ்ரீநகர், ஜூலை 12–

ஜம்மு – காஷ்மீர் மாநிலம் அமர்நாத் குகைக் கோயிலில் ஆண்டுதோறும் தோன்றும் பனி லிங்கத்தை தரிசிக்க ஜம்மு வழியாக யாத்ரீகர்கள் பயணம் செய்வார்கள். இந்த ஆண்டு தரிசனத்தையொட்டி யாத்ரீகர்களின் முதல் குழுவினர் கடந்த 28ம் தேதி பயணத்தை தொடங்கினர். முதல் நாளாக 2,280 யாத்ரீகர்கள் மலையடிவாரத்தில் இருந்து அமர்நாத் ஆலயத்துக்கு புறப்பட்டு சென்றனர்.

யாத்திரையின் 12வது நாளான நேற்று முன்தினம் அனந்தநாக் மாவட்டத்தின் வழியாக வந்த யாத்ரீகர்களின் பேருந்து மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 7 பேர் பலியாகினர். 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், யாத்திரையின் 13 வது நாளான நேற்று 10,926 பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசித்துள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். இதுவரை மொத்தம் 1,57,618 யாத்ரீகர்கள் தரிசனம் செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


## வெள்ளை மாளிகை தலைமை நிர்வாகியாக இந்திய வம்சாவளி பெண் நியமனம்

வாஷிங்டன், ஜூலை 12–

நியோமியை அமெரிக்கா ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் வெள்ளிக்கிழமை இருக்கும் வெள்ளைமாளிகையின் தலைமை நிர்வாகியாக நியமித்துள்ளார்.

வெள்ளை மாளிகையின் நிர்வாகம் மற்றும் பட்ஜெட் தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரமும் நியோமி ராவிடம் உள்ளது. இதனால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதவியாக கருதப்படுகிறது.

நியோமிராவ் இதற்கு முன்பாக முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ்புஷ் அரசாங்கத்தில் இணை ஆலோசகராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




| TRANSFER TYPE | REVISED RATE |
|---|---|
| Upto Rs.1,000/- | Nil |
| From Rs. 1,000/- to 1,00,000/- | Rs. 5/- + applicable GST/ST |
| From Rs. 1,00,000/- to 2,00,000/- | Rs. 15/- + applicable GST/ST |

# உடனடி பணப்பரிமாற்ற சேவை: ஸ்டேட் வங்கி கட்டணம் உயர்வு

**ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை – ரூ.15**

புதுடெல்லி, ஜூலை 12–

இந்தியாவின் முன்னணி வங்கிகளில் ஒன்றான ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, (எஸ்பிஐ) ஐஎம்பிஎஸ் (IMPS) (இம்மீடியட் பேமண்ட் சர்வீஸ்) முறையில் பணப்பரிமாற்றம் செய்வதற்கான சேவைக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

உடனடி பணப்பரிமாற்ற சேவை எனப்படும் ஐஎம்பிஎஸ் (IMPS) முறையில் பணப்பரிமாற்றம் செய்வதற்கான சேவைக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பது குறித்து டிவிட்டரில் செய்தி வெளியிட்டப்பட்டுள்ளது.

ஜூலை மாதத் துவக்கத்தில், வங்கிப் பணியில் தனது 62வது ஆண்டினை நிறைவு செய்திருக்கும் எஸ்பிஐ, ரூ.1000 வரை ஐஎம்பிஎஸ் முறையில் பணப்பரிமாற்றம் செய்ய எந்த கட்டணமும் விதிக்கப்படவில்லை.

அதே சமயம், ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரையிலான பணப்பரிமாற்றத்துக்கு ரூ.5 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஜிஎஸ்டி வரிக்கு அப்பாற்பட்டது. அதே போல, ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரையிலான பணப்பரிமாற்றத்துக்கு ரூ.15 கட்டணம் வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐஎம்பிஎஸ் முறையில் 24X7 மணி நேரமும் பணப்பரிமாற்றம் செய்யலாம். அதே சமயம், பணப்பரிமாற்றத்துக்கான கோரிக்கை செல்போன் அல்லது இணையதளம் மூலமாக வைக்கப்பட்டதுமே, உடனடியாக பணப்பரிமாற்றம் செய்யப்படும் என்பது இதன் சிறப்பம்சங்களாகும்.

# குஜராத்தில் பாரதீய ஜனதாவுக்கு எதிராக அதிருப்தி அலை

ஆமதாபாத், ஜூலை 12–

பாரதீய ஜனதாவுக்கு அதிக செல்வாக்கு உள்ள மாநிலங்களில் குஜராத் முதலிடத்தில் உள்ளது. இங்கு 1990ம் ஆண்டு முதன் முதலாக பாரதீய ஜனதா, ஜனதா தளம் கூட்டணி ஆட்சி அமைந்தது.

அதன் பிறகு ஒரு தடவை மட்டும் காங்கிரஸ் இங்கு ஆட்சிக்கு வந்தது. மற்ற காலங்களில் எல்லாம் பாரதீய ஜனதாவே அங்கு ஆட்சியில் இருந்து வருகிறது.

பிரதமர் மோடி இந்த மாநிலத்தில் தொடர்ந்து 12 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அவர் பிரதமர் ஆகி விட்டதால் அவரை தொடர்ந்து ஆனந்திபென் பட்டேல் முதல்வர் ஆனார். அவர் மீது அதிருப்தி ஏற்பட்டதால் அவரை மாற்றி விட்டு விஜய் ரூபானியை முதல்வர் ஆக்கினார்கள்.

பிரதமர் மோடி இங்கிருந்து சென்ற பிறகு குஜராத் பாரதீய ஜனதா ஆட்சி மீது பல்வேறு வகையிலும் அதிருப்தி ஏற்பட்டு வருகிறது.

பாரதீய ஜனதாவுக்கு இங்கு பட்டேல் மற்றும் தலித் சமூகத்தினர் அதிக அளவில் ஆதரவு தெரிவித்து வந்தனர். இப்போது இந்த சமூகத்தினரே ஆட்சிக்கு எதிராக திரும்பி இருக்கிறார்கள்.

ஏற்கனவே குஜராத்தில் நடந்த உள்ளாட்சி தேர்தலில் யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு காங்கிரஸ் வெற்றியை பெற்றது. பாரதீய ஜனதாவிடம் இருந்த கிராம பஞ்சாயத்துகள் பலவற்றை காங்கிரஸ் கைப்பற்றியது.

இந்த நிலையில் இந்த ஆண்டு இறுதியில் குஜராத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதில், பாரதீய ஜனதாவுக்கு பல்வேறு வகையிலும் பாதிப்பு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுகிறது.

மாட்டு இறைச்சி போன்ற பிரச்சினைகளால் தலித் சமூகத்தினர் இப்போது பாரதீய ஜனதா மீது அதிருப்தியில் இருக்கிறார்கள். இதுவும் தேர்தலை பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மிசா பாரதியிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் 8 மணி நேரம் விசாரணை

புதுடெல்லி, ஜூலை 12–

ராஷ்டீரிய ஜனதா தள தலைவர் லல்லு பிரசாத் யாதவ் மத்தியில் ரெயில்வே அமைச்சராக இருந்த போது அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் வருமானத்துக்கு அதிகமாக ஏராளமான சொத்துக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக லல்லு பிரசாத் மீது வருமான வரித்துறை வழக்குப்பதிவு செய்து அவரது வீடுகள் குடும்பத்தினர் வீடுகளில் சோதனை நடத்தினர்.

இதன் தொடர்ச்சியாக லல்லுவின் மகள் மிசா பாரதி அவரது கணவர் சைலேஷ் குமார் ஆகியோரிடமும் அமலாக்கப்பிரிவு அதிகாரிகள் சம்மன் அனுப்பி விசாரணை நடத்தினார்கள். கடந்த 8ந்தேதி டெல்லியில் உள்ள மிசாபாரதிக்கு சொந்தமான பண்ணை வீடு உள்பட 3 இடங்களில் அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள்.

இதில் ரூ.8 ஆயிரம் கோடிக்கு மிசாபாரதி சட்ட விரோதமாக பண பரிமாற்றம் செய்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து மிசா பாரதி, அவரது கணவர் சைலேஷ்குமார் ஆகியோருக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

மிசாபாரதி மட்டும் டெல்லியில் உள்ள அமலாக்கப்பிரிவு அலுவலகம் முன்பு ஆஜரானார். கணவர் ஆஜராகவில்லை. சட்ட விரோத பண பரிமாற்றம் தொடர்பாக மிசா பாரதியிடம் அதிகாரிகள் சரமாரியாக கேள்விகள் கேட்டு விசாரணை நடத்தினார்கள். காலை 11 மணிக்கு தொடங்கிய விசாரணை தொடர்ந்து 8 மணி நேரம் நீடித்தது.

# ஆதார் வழக்குகள் அனைத்தும் அரசியலமைப்பு சட்ட அமர்வுக்கு மாற்றம்

புதுடெல்லி, ஜூலை 12–

ஆதார் எண் முதலில் கொண்டு வந்த போது, நாட்டில் நடைபெற்று வரும் குற்றங்களை தடுப்பது உள்ளிட்ட பல்வேறு காரணங்களை மத்திய அரசு கூறியது.

சமூக நல திட்டங்களுக்கு இது கட்டாயமாக்கப்படாது என்று முதலில் மத்திய அரசு தெரிவித்தது. ஆனால் படிப்படியாக பல்வேறு அரசின் திட்டங்களுக்கு ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டு வருகிறது.

இதனால் கியாஸ், ரேஷன் உள்ளிட்ட பல்வேறு சமூக நல திட்டங்களுக்கு மானியம் பெற ஆதாரை கட்டாயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சுப்ரீம் கோர்ட்டில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அதேபோல், ஆதார் தொடர்பான வழக்குகளை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றுமாறு மத்திய அரசும் மனு தாக்கல் செய்தது.

இந்நிலையில், பல்வேறு சமூக நலத்திட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கு ஆதாரை கட்டாயமாக்குவது தொடர்பான வழக்குகளை, 5 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு சட்ட அமர்வுக்கு இன்று மாற்றப்பட்டுள்ளது. ஆதார் தொடர்பான வழக்குகளை ஜூலை 18, 19 தேதிகளில் அரசியல் சாசன அமர்வு விசாரிக்கும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். முன்னதாக, ஆதாரை கட்டாயமாக்குவது தொடர்பான வழக்குகளை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றுமாறு தலைமை நீதிபதியிடம் முறையிடுங்கள் என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி செல்லமேஸ்வரர் தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

# காபி குடித்தால் நீண்ட நாள் உயிர் வாழலாம்: ஆய்வில் தகவல்

கலிபோர்னியா, ஜூலை 12–

அதிக அளவில் காபி குடித்தால் பித்தம் அதிகரித்து உடல் நலக்குறைவு ஏற்படும் என்ற பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால் தினமும் காபி குடித்தால் நீண்ட நாட்கள் உயிர் வாழ முடியும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிபுணர் பேராசிரியர் வெரோனிகா டபிள்யூ செடியாவன் இது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

2 லட்சத்து 15 ஆயிரம் பேரிடம் இது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் காபி குடிப்பவர்களுக்கு உயிர் கொல்லி நோய்களான இருதய நோய், புற்று நோய், கல்லீரல் நோய், பக்கவாதம் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட நோய்களின் தாக்கம் மிகவும் குறைவு என கண்டறியப்பட்டுள்ளது.

எனவே இவர்களால் நீண்ட நாட்கள் உயிர் வாழ முடியும் என நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் காபியில் ஆன்டி ஆக்சிடென்ட்ஸ் எனப்படும் நச்சு தன்மை எதிர்ப்பு சக்தி அதிக அளவில் உள்ளது. இது புற்றுநோய் உள்ளிட்ட இதர நோய்கள் வராமல் தடுக்கின்றன என்றும் கூறப்பட்டுள்ளது. இத்தகவல் மருத்துவ நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## நிலச்சரிவில் சிக்கி பலியானவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.4லட்சம்: அருணாசலபிரதேச முதல்வர் அறிவிப்பு

இட்டாநகர், ஜூலை 12–

அருணாசலபிரதேச மாநிலத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. அங்குள்ள பழம்பரா மாவட்டம் லப்தப் கிராமத்தில் 4 நாட்களாக இடைவிடாது மழை கொட்டி வருகிறது.

இந்த நிலையில் அக்கிராமத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு மண் சரிந்து அருகில் இருந்த வீடுகள் மீது விழுந்தது. இதில் பலர் மண்ணில் புதைந்தனர்.

உடனே தேசிய மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு வந்து மீட்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர்.

இதில் 5 பேர் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து மீட்பு பணிகள் நடந்து வருகிறது.

பலியானவர்கள் குடும்பத்துக்கு அருணாசலபிரதேச முதல்வர் பெமாகாண்டு இரங்கல் தெரிவித்து உள்ளார். மேலும் தலா ரூ. 4 லட்சம் நிவாரண நிதி அளிக்க உத்தரவிட்டுள்ளார்.

இதே கிராமத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் 150 பேர் சிக்கி கொண்டனர். அவர்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர் 3 நாட்கள் போராடி மீட்டனர். இதில் ஈடுபட்ட ராணுவ ஹெலிகாப்டர் மோசமான வானிலை காரணமாக நொறுங்கி விழுந்ததில் 4 பேர் பலியானார்கள்.

தற்போது மீண்டும் அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளது.


தமிழ்நாடு அரசு

**பொதுப்பணித்துறை**

கட்டிட அமைப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.8/2017-18/வபி/

இலஷொ.பதி/கோ.6/நாள்:10.07.2017

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், பொபதுவில் பதிவு பெற்று புதுப்பித்துள்ள தகுந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து திருவள்ளூர் பொபது கட்டட (க&ப)கோட்டம், செயற்பொறியாளர் அலுவலகத்தில் 26.07.2017 அன்று மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

அப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே செயற் பொறியாளர் அவர்களால் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் ஒப்புதல் பெற்ற முகவர்களின் முன்னிலையில் மாலை 3.15 மணி அளவில் திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | தோராய மதிப்பு | முன் வைப்புத் தொகை ரூபாய் |
|---|---|---|
| திருவொற்றியூர் நகரம் அரசு பள்ளிகள் மற்றும் அரசு மருத்துவமனையில் குடிநீர் தண்ணீர் (ஆர்.ஓ) பிளான்ட் அமைக்கும் பணி | ரூ.15.00 இலட்சங்கள் | 15,000/- |
| திருவொற்றியூரில் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி | ரூ.20.00 இலட்சங்கள் | 20,000/- |

குறிப்பு :

1) அனைத்து பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் செயற்பொறியாளர், பொபது., கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், திருவள்ளூர் அலுவலகத்தில் 25.07.2017 அன்று மாலை 5.45 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தக்காரர்கள் வகுப்பு-3. பணி முடிக்கப்பட வேண்டிய காலம் 4 மாதங்கள். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் செலுத்துச்சீட்டு ரூ.6000+300/- (கணக்கு தலைப்பு- 0059-80-800-AC-0107 (01 Miscellaneous receipts) மற்றும் விற்பனை வரி 0040-00-111-AA-0003 செலுத்தி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை திருவள்ளூர் கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயற் பொறியாளர், பொபது**
**கட்டிட (க(ம)ப) கோட்டம், திருவள்ளூர்**

வெ.ஆ.எண்.107/செ.ம.தொ.அ/2017/திருவள்ளூர்.



ramco

**ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்**

CIN: L72300TN1997PLC037550

பதிவு அலுவலகம்: 47, பிஎஸ்கே நகர், ராஜபாளையம்–626 108

கார்ப்பரேட் அலுவலகம்: 64, சர்தார் பட்டேல் ரோடு, தரமணி, சென்னை–600 113

Email:investorcomplaints@ramco.com, website: www.ramco.com

Tel: +91 44 2235 4510 / 6653 4000, Fax: +91 44 2235 2884

**இருபதாவது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்**

4 ஜூன் 2017 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் 20வது வருடாந்திர பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை, 4 ஆகஸ்ட் 2017 அன்று காலை 11.45 மணிக்கு P.A.C.R. செண்டினரி மெமோரியல் கம்யூனிட்டி ஹால், சுதர்சன் கார்டன்ஸ், P.A.C. ராமசாமி ராஜா சாலை, ராஜபாளையம்–626 108ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பு அனைத்து பங்குதாரர்களுக்கும் தனித்தனியே அவர்களின் பதிவு பெற்ற இமெயில் ஐடி/முகவரிக்கு 7 ஜூலை 2017 அன்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள கம்பெனியின் இணையதளம் மற்றும் www.evotingindia.com என்ற சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (CDSL) இணையதளத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014–ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன் 44வது ஷரத்தின்படி, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி அளித்துள்ளது. இதற்காக CDSLன் சேவைகளை கம்பெனி பெற்றுள்ளது. ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு செவ்வாய்க்கிழமை, 1 ஆகஸ்ட் 2017 (காலை 9.00 மணி) தொடங்கி வியாழக்கிழமை, 3 ஆகஸ்ட் 2017 (மாலை 5.00 மணி) முடிவடைகிறது. வாக்களிக்க தகுதியானவர்களுக்கு Cut off தேதியாக வெள்ளிக்கிழமை, 28 ஜூலை 2017 உள்ளது. மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு பங்குகளை பெற்றவர்கள், ஆனால் Cut off தேதிக்கு முன்பாக உறுப்பினர்கள் ஆனவர்கள் கீழ்க்கண்ட முறையில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம்.

அ. CDSL–க்கு 16 இலக்க Beneficiary ID, நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) –க்கு 8 இலக்க DP ID மற்றும் 8 இலக்க Client ID மற்றும் Physical வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்களுக்கான Folio எண்ணை, அவர்களின் Login IDயாகவும் மற்றும் PAN எண்ணை Password ஆகவும் பயன்படுத்தலாம்.

ஆ. ரிமோட் மின்னணு வாக்குப்பதிவிற்கு ஏற்கனவே பதிவு செய்த உறுப்பினர்கள் அவர்களது தற்போதைய Login மற்றும் Passwordஐ இதற்கு பயன்படுத்தலாம்.

இ. மற்றவர்கள் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவிற்கு Login ID மற்றும் Passwordஐ பெற investor@cameoindia.com என்ற இமெயில் முகவரிக்கு அனுப்பி அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவில் வாக்களிக்காத பட்சத்தில், கம்பெனியினால் அளிக்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு முறை அல்லது வாக்குச்சீட்டு மூலம் தீர்மானங்கள் மீது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கலாம்.

ரிமோட் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் கூட்டத்தில் மறுபடியும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்.

Cut off தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகியிருக்கும் பெயர்களில் உள்ளவர்கள் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு/வாக்குப்பதிவு செய்யும் உரிமையை பெறுவர்.

மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் சந்தேகம் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவை அணுகலாம் மற்றும் www.evotingindia.comல் உள்ள மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு இமெயில் அனுப்பலாம். மின்னணு வாக்குப்பதிவு வசதி தொடர்பாக ஏதேனும் சந்தேகம் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து திரு. ராகேஷ் டால்வி, துணை மேலாளர், CDSL, 17வது தளம், பிஜே டவர்ஸ், தலால் தெரு, கோட்டை, மும்பை–400 001. இமெயில்: helpdesk.evoting@cdslindia.com, Toll free No.1800–200–5533 அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–

இடம்: சென்னை
தேதி: 11 ஜூலை 2017

P R கார்த்திக்
கம்பெனி செயலாளர்



**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

The Oberoi Group உறுப்பினர்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.

வெப்சைட்: www.eihassociatedhotels.in

Phone: 91-44-2234 4747; Fax: 91-44-2234 6699

CIN: L92490TN1983PLC009903

**34வது வருடாந்திர பொதுக்கூட்டம்**

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது:

(a) வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் முப்பத்துநான்காவது வருடாந்திர பொதுக்கூட்டம் **4 ஆகஸ்ட், 2017 வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.30 மணிக்கு** டிரைடண்ட், 1/24, ஜி.எஸ்.டி.ரோடு, மீனம்பாக்கம், சென்னை– 600 027ல் நடைபெறுகிறது. வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு, வருகை சீட்டு, பதிலி படிவம் மற்றும் 31 மார்ச், 2017ல் முடிந்த நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை மின்னணு முறையிலும் சாதாரண முறையிலும் பதிவுத் தபால் மூலம் அனுப்பும் பணி 10 ஜூலை, 2017 அன்று முடிக்கப்பட்டுள்ளது. வருடாந்திர அறிக்கை, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருகை சீட்டு மற்றும் பதிலி படிவத்தை கம்பெனியின் வெப்சைட் www.eihassociatedhotels.inல் உள்ளது. மேற்சொன்ன ஆவணங்களை காகித வடிவில் பெற உறுப்பினர்கள் விரும்பினால், அவர்களின் பதிவு பெற்ற முகவரிக்கு இவை இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இதற்காக, isdho@oberoigroup.comக்கு DP ID–Client ID/Folio No. ஆகியவற்றை குறிப்பிட்டு இமெயில் அனுப்புமாறும் அல்லது கம்பெனி செயலாளர், 7, ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054 அவர்களுக்கு எழுத்துபூர்வமான கோரிக்கையை அனுப்புமாறும் உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்சொன்ன ஆவணங்கள் NDSL இணையதளம் https://www.evoting.nsdl.comல் உள்ளது.

(b) கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20ன்படி, பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்கள் மின்னணு முறையில் வாக்களிப்பதற்காக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து பங்குதாரர்களுக்கும் தொலைதூர மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான வசதியை கம்பெனி அளித்துள்ளது. இதற்காக, அறிவிப்பில் உள்ள அனைத்து அயிட்டங்களின் மீது மின்னணு முறையில் பங்குதாரர்கள் வாக்குகளை பதிவு செய்வதற்காக மின்னணு வாக்குப்பதிவிற்கு நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட்("NSDL")டுடன் ஒரு ஒப்பந்தத்தில் கம்பெனி கையெழுத்திட்டுள்ளது.

(c) கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்படும் மற்றும் கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே அவர்களின் வாக்குகளை பதிவு செய்யாமல் இருந்தால் அவர்களுக்கு கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை உள்ளது. வாக்குச்சீட்டு முறையில் வாக்களிக்கும்போது, மின்னணு முறையில் வாக்குகளை பதிவு செய்த பங்குதாரர்கள் கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் வைத்துள்ள பங்குகள் விகிதத்தில் பங்குதாரர்களின் வாக்குரிமை இருக்கும்.

(d) கூட்டத்திற்கு முன்பாக மின்னணு முறையில் வாக்களித்த உறுப்பினர்கள், கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

(e) கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை 28 ஜூலை, 2017 அன்று உறுப்பினர்/பயனுள்ள உரிமையாளர் (மின்னணு முறையில் பங்குகளை வைத்துள்ளவர்கள் விஷயத்தில்) பெயர்களில் பதிவு செய்துள்ள பங்குகளின் செலுத்தப்பட்ட மதிப்பு அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை கணக்கிடப்படும். கட் ஆப் தேதியான 28 ஜூலை, 2017 அன்று உறுப்பினர் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளினால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களில் உள்ள நபர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதியை பெறலாம்.

(f) அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினர் ஆனவர் மற்றும் கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, 28 ஜூலை 2017 அன்று பங்குகளை வைத்துள்ளவர் அவர்களின் folio No./DP ID and Client ID குறிப்பிட்டு isdho@oberoigroup.com; evoting@nsdl.co.in or asimsecy@gmail.com ("ஆராய்வாளர்") அவர்களுக்கு இமெயில் அனுப்பி லாகிங் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும் நீங்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்கு ஏற்கனவே NSDL–ல் பதிவு செய்திருந்தால், தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை பயன்படுத்தி நீங்கள் வாக்களிக்கலாம். ஒருவேளை நீங்கள் பாஸ்வேர்டை மறந்திருந்தால், www.evoting.nsdl.com–ல் உள்ள "Forget User Details/Password" என்ற ஆப்ஷனை பயன்படுத்தி உங்கள் பாஸ்வேர்டை மீட்டமைக்கலாம்.

(g) மின்னணு வாக்குப்பதிவு **1 ஆகஸ்ட் 2017 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி)** தொடங்கி 3 நாட்கள் நடக்கும். மின்னணு வாக்குப்பதிவு **3 ஆகஸ்ட் 2017 (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி) முடிவடைகிறது**. அதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு NSDL–லினால் முடக்கப்படும். உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்து விட்டால் பின்னர் அதனை மாற்ற முடியாது. மின்னணு வாக்குப்பதிவிற்கான விவரமான செயல்முறைகள்/அறிவுறுத்தல்கள் ஆகியவை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது. ஏதாவது சந்தேகம் அல்லது குறை இருப்பின் அது குறித்து பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவை அணுகலாம் அல்லது https://www.evoting.nsdl.comல் படியிறக்க பிரிவில் உள்ள பங்குதாரர்களுக்கான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம்.

(h) குறைகளை தீர்க்க அணுக வேண்டிய பொறுப்பான நபர் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

i) வாக்குசீட்டு மூலம் ஓட்டுப்பதிவு:
திரு. தேஜஸ்வி தீட்சித்
உதவி கம்பெனி செயலாளர்
EIH லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம்:
7, ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054.
இமெயில்: tejasvi.dixit@oberoigroup.com
தொலைபேசி: 011 2389 0505; பேக்ஸ்: 011 2389 0575

ii) மின்னணு வாக்குப்பதிவு:
திரு. ராஜீவ் ரஞ்சன்
நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)
டிரேட் வேர்ல்ட் – A விங், கமலா மில்ஸ் காம்பவுண்ட்
லோயர் பரேல், மும்பை–400 013
இமெயில்: rajivr@nsdl.co.in போன்: 022 2499 4738

(i) சட்டப்பிரிவு 91, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 10ன் மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 42ன்படி வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் வெள்ளிக்கிழமை, 28 ஜூலை, 2017 முதல் ஞாயிறுக்கிழமை, 30 ஜூலை, 2017 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக

இடம்: கொல்கத்தா
தேதி : 12 ஜூலை, 2017

இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்